https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# மானுடம் பாடவந்த மாக்கவிஞன்



**பேராசிரியர் ப. மகாலிங்கம்**
மொழிகள்புல முதல்வர்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர்
ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை - 600 117

தோரண வாயில்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப்படும்** *(குறள்: 50)*

*என்னும் வள்ளுவத்திற்கு உயிரோவியம் தீட்டித் தாம் படைத்த காவியமாம் இராமகாதையால் சாதனை படைத்த மாக்கவிஞன் கம்பன்! காப்பிய நாயகன் இராமனின் தலைமைப் பண்பு நலன்களாலும் ஆளுமைத் திறத்தினாலும் மானுடத்தின் வெற்றியைக் காப்பியம் முழுவதிலும் கம்பன் நிறுவிக் காட்டுகின்றான். கம்பனின் கவி உள்ளத்தில் மனித உணர்வுகளின் ஆழத்தையும் மனித அறிவின் அகலத்தையும் மிகவும் துல்லியமாகக் காண முடிகின்றது. இதன் காரணமாகவே 'கல்வியில் பெரியோன் கம்பன்' என்னும் முதுமொழி நம் மண்ணில் நிலவி வருகின்றது.*

*செந்தமிழ் நாட்டின் பெருமையைச் சொல்ல வருகின்ற பாரதியும்,*

**கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்**

**கம்பன் பிறந்த தமிழ்நாடு** *(பாரதியார், செந்தமிழ் நாடு, பாடல்: 6)*

*என இதற்குத் தம் கவிதையால் கட்டியம் கூறுகின்றார்.*

## அயோத்தி இராமனின் மனிதநேயம்

*அயோத்தி மாநகரில் இளவரசனாக இராமன் உலா வருகின்ற காட்சியைக் கம்பன் காட்டுகின்றான்.*

***எதிர் வரும் அவர்களை, எமையுடை இறைவன்,***

***முதிர் தரு கருணையின் முகமலர் ஒளிரா,***

***எது வினை? இடர் இலை? இனிது நும் மனையும்?***

***மதி தரு குமரரும் வலியர்கொல்? எனவே***

*(கம்பன், பால காண்டம், திரு அவதாரப் படலம், பாடல்: 230)*

*என இராமன் தன் எதிரில் தென்படும் நகர மக்களின் நலனைக் கனிவுடன் கேட்டு அறிகின்றார். அத்தோடு, குடும்பத்தார், குழந்தைகள் என அனைவரின் நலனையும் அறிவதில் பரிவு காட்டுகின்றார். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பதற்கிணங்க இளம்*

இராமன் மனத்து மலர்ச்சியாம் மானுட நேயத்தை இதன் வழியாகக் கம்பன் புலப்படுத்துகின்றான்.

**மக்களின் உள்ளங் கவர் தனிப்பெரும் தலைவன்**

மக்களைப் பெரிதும் நேசித்த இராமனிடத்து மக்களும் பேரன்பும் பற்றும் பாசமும் கொண்டிருந்தனர். இது வெளிப்பட்டு நிற்பதற்கான ஒரு காட்சியைக் கம்பன் காட்டுகின்றான். பேரரசன் தயரதனின் ஆணையை ஏற்று, இராமன் அயோத்தி நகர் விட்டுக் காட்டிற்குச் செல்லப் புறப்படுகின் றான்.

அயோத்தியின் அந்தத் துயர் மிகுந்த சூழலைக் கம்பன்,

**கிள்ளையோடு பூவை அழுத; கிளர் மாடத்து**

**உள் உறையும் பூசை அழுத; உரு அறியாப்**

**பிள்ளை அழுத; பெரியோரை என் சொல்ல**

**வள்ளல் வனம் புகுவான் என்று உரைத்த மாற்றத்தால்**

*(கம்பன், அயோத்தியா காண்டம், நகர் நீக்கு படலம், பாடல்: 96)*

எனத் தம் கவிதையால் சோகச் சித்திரம் வடித்துள்ளான். தம் உயிர் நாயகன் இராமனின் பிரிவுக்காகப் பறவை இனத்துக் கிளிகள் தொடங்கி, குழந்தைகள் பெரியோர் கள் வரை உயிர்க் குலங்கள் அனைத்தும் நெஞ்சம் நெகிழ்ந்து கண்ணீரில் மூழ்கியதைக் கம்பன் காட்சிப்படுத்துகின்றான். இதன்வழி ஒட்டுமொத்த மக்களின் உள்ளம் கவர்ந்த தனிப்பெரும் தலைவனாக இராமன் திகழ்வதை அறிய முடிகிறது.

**பின்னவன் பெற்ற செல்வம்**

ஆழி சூழ் உலகமெலாம் பரதனே ஆளவும் இராமன் பதினான்கு ஆண்டுகள் கானகம் சென்று தவம் மேற்கொள்ளவும் பேரரசன் தயரதன் ஆணையிட்டதாகக் கைகேயி இராமனிடத்தில் உரைக்கின்றாள். இந்தச் சூழலிலும் இராமன் எவ்வித மனத்தாங்கலை யும் கொள்ளாமல் சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை போன்ற முகத்துடன் திகழ்ந்ததைச் சுட்டிடும் கம்பன், இதன்வழி இராமனின் உன்னத மானிடப் பண்பைப் பதிவாக்குகின்றான். இதன் உச்சமாகத் தனக்குரிய ஆட்சிச் செல்வத்தைத் தன் தம்பி பரதன் பெற்றுள்ளதை நினைந்து போற்றிடும் இராமன்,

**பின்னவன் பெற்ற செல்வம்**

**அடியனேன் பெற்றது அன்றோ?** *(கம்பன், அயோத்தியா காண்டம், பாடல்: 1604)*

என மகிழ்ந்திடும் பண்பட்ட நெஞ்சத்தை மானுட மரபின் உச்சமாகக் கம்பன் சித்தரிக்கின்றான்.

**வேற்றுமை கருத்தாது உடன்பிறப்பாக ஏற்றல்**

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”** *(குறள்: 972)*

என உலக உயிர்கள் அனைத்தின் சமனியப் புரட்சியை மிகத் தொன்மைக் காலத்தே ஓங்கி உரைத்த பெருமைக்குரியவர் அய்யன் திருவள்ளுவர். வள்ளுவர் வழி நின்று இராம காவியம் படைத்த கம்பன், காப்பிய நாயகன் இராமனின் பண்பு நலன்களில் ஏற்றத்தாழ்வு பாராட்டாத அரவணைப்பை மெருகேற்றிக் காட்டுகின்றான். தம் வாழ்வில் உடன் பயணிக்கின்ற ஏழை வேடன் குகன், குன்றிடை வாழும் குரக்கினத் தலைவன் சுக்ரீவன், அரக்கர் குலத்தில் தோன்றிய அறவோன் வீடணன் ஆகியோரை எவ்வித வேறுபாடும் கருதாது தம் உடன் பிறந்தோராக ஏற்றுப் போற்றிடும் உன்னத மனிதநேய மாண்பைக் கம்பன் தன் கவிதை யில் தீட்டிப் பெருமிதம் கொள்கின்றான்.

**குகனோடும் ஐவரானோம் முன்புபின் குன்று சூழ்வான்**

**மகனொடும் அறுவரானோம் எம்முழை அன்பின் வந்த**

**அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானோம்**

**புகலரும் கானம் தந்த புதல்வரால் பொலிந்தான் உந்தை**

*(கம்பன், யுத்த காண்டம், பாடல்: 6507)*

எனக் கம்பன், முதலில் இராமன் தன்னள வில் மற்றவர்களை உடன்பிறந்தோராக அரவணைத்து ஏற்றுக் கொள்வதைக் காட்டு கின்றான். அந்த அளவில் மட்டுமல்லாது தன் தந்தை தயரதன், இந்தக் கானகம் தந்த புதல்வர்களாகிய இவர்களால் பொலிந்த தாகவும் குறிப்பிடுவதன்வழி மனிதநேயச்

சிகரமாக இராமன் விளங்கித் தோன்றுவதைக் கம்பன் எழில் கொஞ்சிடச் சித்தரிக்கின்றான்.

**விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!**

**அணைந்துகொள்! உன்னைச் சங்கம மாக்கு**

**மானிட சமுத்திரம் நான் என்று கூவு!** (பாரதிதாசன், புதிய உலகம், உலகம் உன்னுடையது, பாடல்: 54)

என மானிட முழக்கம் இடுகின்ற பாவேந்தரின் கவிதை, இராமனின் உன்னத மானுட மாண்பினுக்கு அரண் சேர்த்து நிற்கின்றது!

## மானுடப் பண்பு உணர்த்திடும் கம்ப சூத்திரம்

இராமன் கானகம் செல்ல மரவுரி தரித்தபோது, "நின் பிரிவினும் சுடுமோ கானம்"(கம்பன், அயோத்தியா காண்டம், பாடல்: 1827) எனக் கேட்டு உடன்புறப்பட்ட பெருமைக்கு உரியவள் கற்புக்கனல் சீதாபிராட்டி! தன்னை அல்லாமல் "இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்" (கம்பன், சுந்தர காண்டம், பாடல்: 5486) தாங்கி, 'ஓர் இல்' எனும் இல்லற நெறி நின்று ஒழுகிடும் இராமனை 'மானுடக் குரிசிலாக' - மாற்றான் சிறையில் அல்லல்பட்டு வருந்திய வேளையிலும் சீதையின் நெஞ்சம் நினைந்து போற்றுகின்றது. சீதையை மணம் கொண்ட நாளில் இராமன் சீதைக்கு அளித்த அந்தச் செவ்வரத்தை இருவரும் பிரிந்திருக்கும் காலத்தில், சீதை தாம்தான் என்பதை அனுமனுக்கு உணர்த்தி, இராமனிடம் தன்னை அடையாளப்படுத்துவதற்காக வேண்டி, மீண்டும் அவ்வரத்தை அனுமனிடம் வெளிப்படுத்துகின்றாள். தன்னைப் பிரிந்திருக்கும் இராமனுக்கு அவன் தந்த வரத்தை நினைவூட்டுவதின்வழி, அகவாழ்வின் காதல் நுட்பத்தையும் சீதை இங்கு மேற்கொள்கின்றாள். மனம் எனும் ஆற்றலால் அறியப்பட்டிருக்கும் மனிதத்தின் மிக மிக நுணுக்கமான உளவியல் தன்மைகளையெல்லாம் தம் காவியத்தில் வடித்துக் காட்டிடும் கம்பனின் கவிவண்ணம் மானுடப் பண்பு உணர்த்திடும் கம்ப சூத்திரம் என்பதே உண்மை!

## குகனின் தாயனைய அன்பைப் போற்றும் இராமன்

காட்டிலே வேட்டையாடித் திரியும் வேடர் குலத் தலைவனான குகன், கங்கைக் கரையில் தவமுனிவர்களோடு தங்கியிருக்கும் இராமனைக் கண்டு தொழுதிட விழைகின்றான். அவ்வாறு வரும்போது இராமன் உண்பதற்காக வேண்டி, குகன் தம் தாயனைய அன்பின் உயரத்தையும் ஆழத்தையும் உணர்த்தும் வண்ணம் தேனையும் மீனையும் கொண்டு வந்து பரிசாகக் கொடுக்கின்றான். அப்போது உடனிருந்த தவ முனிவர்கள் முகம் சுழிக்கின்றனர். அதனை உணர்கின்ற இராமன் ஏழை வேடன் குகனின் தூய அன்பை விளக்கிடும் வகையில் தாயினும் நல்லான் என அறிமுகப்படுத்துகின்றான்.

**அரிய, தான் உவப்ப, உள்ளத்து**

**அன்பினால் அமைந்த காதல்**

**தெரிதரக் கொணர்ந்த என்றால்**

**அமுதினம் சீர்த்த! அன்றே**

**பரிவினில் தழீஇய என்னில்,**

**பவித்திரம்; எம் அனோர்க்கும்**

**உரியன; இனிதின் நாமும்**

**உண்டனெம்; அன்றோ!** (கம்பன், அயோத்தியா காண்டம், குகப் படலம், பாடல்: 15)

எனக் கூறிடும் இராமன், விருப்ப மேலிட்டினால் அன்போடு கொணர்ந்தவை என்றால் அது அமுதத்திற்கு ஒப்பானது; மிகவும் தூய்மையானது. எம்மனோர்க்கும் உரியது. இதை நாங்கள் உண்டதாகவே கருதிக் கொள்கின்றோம் என விளங்க உரைக்கின்றான். குகனின் தூய அன்பைப் போற்றிடும் அதே வேளையில் அங்குள்ள தவ முனிவர்களின் போக்கால் குகனின் உள்ளம் பாதித்துவிடாத வகையில் உணர்வு நிலைப் போராட்டங்களுக்கு இடையிலேயும் அதனைப் பக்குவமாக எதிர்கொண்டு அந்தச் சூழலை இனிமையாக்குகின்ற இராமனின் உணர்வு சார்ந்த மனித மேலாண்மைத் திறம் தக்க வகையில் கம்பனில் வெளிப்பட்டுச் சிறப்பது குறிப்பிடத்தக்கது.

### போர்க்களத்திலும் வெளிப்படும் அன்பறம்

*யுத்த காண்டத்தில் கம்பன் காட்டும் காட்சி மனித குலத்தின் கருணை மாண்பிற்கு ஓர் உன்னத சாட்சியாக ஒளிர்கின்றது! போர்க் களத்தில் இராவணனுடன் போர் புரியும் இராமன் தன் வில் ஆற்றலால் வெற்றியை எதிர்கொள்ளும் தருணம் அது எனினும் தம்மோடு போரிடும் இராவணன் தன் ஆயுதங்களைக் கை நழுவவிட்டுப் போர்க் களத்தில் நிராயுதபாணியாக நிற்கின்ற அவலம் நேர்ந்துவிடுகிறது. இதைக் கண்ட இராமன் உரிய ஆயுதங்கள் தாங்கித் தம்மை எதிர்கொள்ளாத நிலையில் எதிரியை வீழ்த்துவது அறம் அன்று எனத் தெளிகின் றான். 'பகைவனுக்கும் அருள் புரிந்திடும் நன்நெஞ்சம்' கொண்ட இராமன் வாழ்வறம் சார்ந்த அறிவுரைகள் பலவற்றை இராவண னுக்கு எடுத்துச் சொல்கின்றான். எதையும் ஏற்க மறுக்கின்ற இராவணனைப் பார்த்துக் கருணை உள்ளத்தோடு 'இன்று போய், போர்க்கு நாளை வா' என இராமன் சொல்லி அவனை அனுப்பி வைக்கின்றான்.*

*இராமனின் அருட்பெரும் கருணை உள்ளத்தைக் காட்ட விழையும் கம்பன்,*

***ஆள் ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த***
**பூளை ஆயின கண்டனை; இன்று போய், போர்க்கு**
**நாளை வா'என நல்கினான் - நாகு இளங் கமுகின்**
**வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்**
*(கம்பன், யுத்த காண்டம், முதற்போர் புரி படலம், பாடல்: 255)*

*எனத் தம் கவித்தூரிகையால் சொல்லோவிய மாக்கிக் காட்சிப்படுத்துகின்றான்.*

**அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;**
**மறத்திற்கும் அஃதே துணை** *(குறள்: 76)*

*என்னும் வள்ளுவத்துப் பொய்யா மொழிக்கு ஓர் உயரிய காப்பியச் சாட்சியாக இராமனின் கருணை ஆளுமை ஒளிர்வதைக் கம்பன் திறம்படத் தீட்டியுள்ள பாங்கு வியந்து எண்ணத்தக்கதாகின்றது!*

### மானுடத்தின் வெற்றி போற்றல்

*தயரதன் எனும் மாமன்னனுக்குத் தலை மகனாகப் பிறந்து, மக்களோடு மக்களாக வாழ்ந்து, அனைத்து வாழ்வியல் இன்ப துன்பங்களையும் எதிர்கொண்டு, அரச மரபினனாயினும் எளிமையின் வடிவாகத் திகழ்ந்து, எல்லா நிலைகளிலும் அன்பறமே பூண்டு, உண்மை மனிதனாக - 'நடையில் நின்றுயர் நாயகனாக' வாழ்ந்து காட்டிய மானுடத்தின் வெற்றியைப் பாடுவதே கம்பன் தன் காவியப் படைப்பின் நோக்கமாக மலர்கின்றது! இதைத்தான் தன் 'இராமாவதார' காவியத்தின் தொடக்கம் முதல் படிப்படியாக வளர்த்தெடுத்து நிறைவாக,*

**தேறினன் அமரர்க்கு எல்லாம் தேவராம் தேவர் அன்றே**
**மாறி இப்பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ**
**ஆறுகொள் சடிலத்தானும் என்று இவர்கள் ஆதி**
**வேருள குழுவை எல்லாம் மானுடம் வென்றது என்றே**
*(கம்பன், கிட்கிந்தா காண்டம், நட்பு கோட் படலம், பாடல்: 3906)*

*என இராமன் எய்தவுள்ள அளப்பரிய மிக உயரிய வெற்றியை, சுக்ரீவன் வாயிலாக 'மானுடத்தின் வெற்றியாக' நிலை நிறுத்தி நிறுவிக் காட்டுகின்றான் கம்பன்!*

### மக்களே உயிர்; மன்னன் உடம்பென்னும் புரட்சி

*அறம் செழிக்க முடியாட்சி நன்மை யுற நடைபெறுகின்ற ஒரு நாட்டில், மன்னனை உயிர் என்றும் மக்களை உடம்பு என்றும் கொண்டு போற்றுவது தமிழ்ப் பண்பாட்டின் தொல் மரபுச் சிந்தனையாகும். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' (புறம்: 186) என்னும் மோசிகீரனாரின் புறநானூற்றுச் சங்கப் பாடல் இதனையே சுட்டுகின்றது. மானுடத்தின் மகத்துவம் பாட வந்த கம்பன் இச் சிந்தனைப் போக்கில் மடைமாற்றம் செய்கின்றான்.*

**வையம் மன்னுயி ராகஅம் மன்னுயிர்**
**உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னன்**
*(கம்பன், அயோத்தியா காண்டம், மந்தாரை சூழ்ச்சிப் படலம், பாடல்: 17)*

*என மக்களை உயிராகவும் மன்னனை உடம்பாகவும் கருதிடும் - 'மக்களை*

முதன்மைப் படுத்திடும்' புரட்சிக் கோட்பாட்டைக் கம்பன் உருவாக்கிப் புதுமை படைக்கின்றான்!

## மானுடத்திற்குச் சூட்டப்பட்ட மணி மகுடம்

காப்பியத்தின் நிறைவாக இராமனின் திருமுடி சுட்டு விழாக் கோலத்தை,

**அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த**

**பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி வீச**

**வரைசெறி குழலி ஓங்க வெண்ணையூர் சடையன் தங்கள்**

**மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி**

(கம்பன், யுத்த காண்டம், திருமுடி சுட்டு படலம், பாடல்: 10491)

எனக் கம்பன் காட்டுவான்.

இப்பாடலில், இராமனின் முடிசூட்டு விழா நிகழ்வில் அனுமன் அரியணை தாங்குவது தொடங்கி அனைவரையும் ஒருவர்கூட விடுபட்டுவிடாமல் மிகவும் கவனமாகக் குறிப்பிட்டுச் செல்லுகின்ற கம்பன், 'வசிட்டனே புனைந்தான் மௌலி' எனச் சொல்லி முடிக்கின்றான். எல்லோரையும் தனித்தனியே குறிப்பிட்டுச் சொன்ன கம்பன், வசிட்ட முனிவர் இராமனுக்குதான் முடி சூட்டினார் என்பதை இப்பாடலில் குறிப்பிடாமல் விட்டுவிடுகின்றான். காரணம் இராமனுக்குப் புனையப்படுகின்ற மௌலி என்பது 'மானுடத்திற்கே சூட்டப்படுகின்ற மணிமகுடம்' என்பதனை நிறுவிக்காட்டி, இதனை உலகினுக்கு அறிவிப்பு செய்ய விழைந்திடும் கம்பனின் கவிநுட்பம் நெஞ்சில் நிறுத்திப் போற்றுதற்குரியது!

இராம இராஜ்ஜியத்தில் ஒரு கிராம இராஜ்யத்தை-முடியாட்சிக் காலகட்டத்தில் குடியாட்சி எனும் மக்களாட்சி குறித்த சிந்தனை வளர்ச்சிக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கால்கோள் செய்த சமூக - அரசியல் கோட்பாட்டுக் கவிஞனாகக் கம்பன் விளங்கித் தோன்றுவது வியந்து நோக்குதற்குரியது!

## கடைவாயில்

மானுடத்தை வணங்கிப் போற்றுகின்ற கம்பனின் நெஞ்சத்து அடிநாதமே **'இராமாவதாரம்'** எனும் உலக மாக்காவியத்தைச் செந்தமிழில் உருக்கொள்ளச் செய்ய வேண்டுவது தான் எனலாம்!

கம்பனின் காவியம் பற்றிக் கூறிடும் பாரதி,

**'எல்லையொன் றின்மை' எனும் பொருள் அதனைக்**

**கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்**

**முயற்சியை,** (பாரதி, தமிழச் சாதி, பாடல்: 20)

தமிழச் சாதியின் பெருமிதமாகக் குறிப்பிடுகின்றார். 'எல்லையொன் றின்மை' என்பதனைக் கம்பன் குறிகளாற் காட்டிட முயன்றது மானுடத்தையும் உள்ளடக்கியதாக இருக்கக்கூடுமோ என எண்ணத் தோன்றுகிறது!

மானுடம் பாடுவதையே தம் கவி வேள்வியாகக் கொண்ட மாக்கவிஞன் கம்பன் என்பதைத் தெள்ளிதின் உணர்ந்து உள்வாங்கியே மகாகவி பாரதி, 'கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்' எனப் பாராட்டிப் பெருமிதம் கொள்வதை அறிய முடிகிறது.

இராம நாமத்தைச் சொல்லிக்கொண்டே உயிர் நீத்ததாகத் தேசத் தந்தை மகாத்மா காந்தியைக் குறிப்பிடுவார்கள். உலகம் போற்றுகின்ற மக்கள் தலைவராம் காந்தியடிகளின் நெஞ்சமெலாம் நிறைந்திருந்த இராமன், மானுடத்தின் வெற்றியாகக் கம்பன் தன் காவியத்தில் தீட்டிக் காட்டியுள்ள 'கம்பராமன்' தான் எனக் கூறப்படுவதன்வழி, கம்பனின் கவியாளுமை, இங்குப் பன்மடங்காக உயர்ந்து தோன்றுகின்றது! (ப.மகாலிங்கம், ஆளுமை அலைவரிசை, 'காந்தி போற்றும் கம்பராமன்', பக்.50-52)

தமிழ் மண்ணின் பண்பாட்டு மெருகேற்றித் தீந்தமிழால் ஆசை பற்றிப் படைத்தளித்த தம் இராமாயணத்தின் வழி, 'மானுடம் பாட வந்த மாக்கவிஞன்' எனச் சிறந்திடும் கம்பன், என்றென்றும் புகழ் பூத்து மணந்திடுவான்! உலக மாக்கவிஞனாக ஒளிர்ந்திடுவான்!!